

## பூலித்தேவன் அவமதிப்பு:

# நெல்லை கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு கிராமமக்கள் மனு

நெல்லை, ஆக.24—

நெல்லைமாவட்டம்சிவகிரி தாலுகா நெற்கட்டும்செவல் கிராமத்தை சேர்ந்த மக்கள் ஏராளமானோர் நெல்லை கலெக்டர் அலுவலகத்திற்கு இன்றுதிரண்டுவந்தனர்பினபு கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்பு அவர்கள் கலெக்டரை சந்தித்து ஒரு புகார் மனு அளித்தனர். அதில் கூறியிருப்பதாவது:—

சுதந்திர போராட்டத்தில் முதல்முதலாக குரல் கொடுத்த பூலித்தேவன் நெற்கட்டும்செவல் பாளையத்தைஆட்சிசெய்தார். அவரை இழிவுபடுத்தும் விதமாக ஒரு குறிப்பிட்ட அமைப்பினர் சார்பில் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டு உள்ளது.

இதேபோல் நெற்கட்டும் செவலில் உள்ள ஒண்டி வீரன் கல்லறையில், மாமன்னன் ஒண்டிவீரன் என்று எழுதப்பட்டு உள்ளது. பூலித்தேவனிடம் தளபதியாக இருந்தவர்தான் ஒண்டிவீரன். ஆனால் அவரை மாமன்னன் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆகவே அதனை அழித்துவிட்டுவீரன் என மாற்றவேண்டும்.

நெற்கட்டும்செவலில் உள்ள மாமன்னன் பூலித்தேவன் மாளிகையில் மாவீரன் பூலித்தேவன் என்றுஎழுதப்பட்டுஉள்ளது. அதனை மாமன்னன் என்று மாற்றி எழுத வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

மாலைமுரசு - 24-8-2011

தமிழ் முரசு. 24-8-2011

ஒண்டிவீரன் விழாவில்

# பூலித்தேவருக்கு அவமானம் வாரிசுகள் கொந்தளிப்பு

## கலெக்டர் ஆபீஸ் முற்றுகை

புளியங்குடி, ஆக. 24-
ஒண்டிவீரன் விழாவில் பூலித்தேவருக்கு அவமானம் இழைக்கப்பட்டதாக வாரிசுகள் கொந்தளித்துள்ளனர்.

நெல்லை மாவட்டம் புளியங்குடி அருகே உள்ள நெற்கட்டும் செவலில் பூலித்தேவன் நினைவிடம் அரண்மனையாக 1998ம் ஆண்டு கட்டப்பட்டது. மேலும் 10 ஆண்டுகளாக செப்டம்பரில் பூலித்தேவன் பிறந்தநாள் விழா ஒவ்வொரு ஆண்டும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாவீரன் ஒண்டிவீரன் வீரவணக்கநாள் என கடந்த ஆகஸ்ட் 20ம் தேதி நெற்கட்டும் செவல் பச்சேரியில் கொண்டாடப்பட்டது. இதில் அரசு சார்பில் தமிழக துணை சபாநாயகர் தனபால், அமைச்சர்.செந்தூர்பாண்டியன், டாக்டர் துரையப்பா எம்எல்ஏ., மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி, அருந்ததியர் சமூக அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் மாவீரன் ஒண்டிவீரன் நினைவு சின்னத்தில் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து ஆதித்தமிழர் பேரவை சார்பில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் மற்றும் சங்கரன்கோவிலில் நடந்த கூட்டத்தில் மாமன்னர் ஒண்டிவீரன் என்ற வாசகங்களும், பேச்சுக்களும் இடம் பெற்றன. இதனால் மாமன்னர் பூலித்தேவன் வாரிசுகள் பெருமளவில் வசிக்கக்கூடிய நெற்கட்டும்செவல் கிராம மக்கள் கொதித்தெழுந்தனர்.

இதையடுத்து இன்று அக் கிராமத்தைச் சேர்ந்த ஊர்த்தலைவர்கள் பஸ் மற்றும் வேன்கள் மூலம் நூற்றுக்கும் மேற்பட்டோர் மாமன்னர் பூலித்தேவரை அவமானப்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி கலெக்டர் செல்.வராஜிடம் மனு கொடுக்க விரைந்தனர்.

அம்மனுவில், " முதல் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முதல் குரல் கொடுத்த மாமன்னர் பூலித்தேவரை அவமானப்படுத்தும் விதமாக ஆதித்தமிழர் பேரவை சார்பில் வெளியிட்ட மாவீரன் ஒண்டி வீரன் என்ற நூலில் எழுதப்பட்டுள்ளது.

இதனால் பூலித்தேவன் வாரிசுகளான நெற்கட்டும் செவலைச் சேர்ந்த நாங்கள் மனதளவில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே நெற்கட்டும்செவல் பச்சேரி கிராமத்தில் மாமன்னர் ஒண்டிவீரன் என வைக்கப்பட்டுள்ள கல்வெட்டை அகற்ற வேண்டும்.

அதேபோல் மாமன்னர் ஒண்டிவீரன் என்று சுவரொட்டி ஒட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பெரும்பான்மையான சுவரொட்டிகள் ஒட்டி சாதிக் கலவரத்தை தூண்டும் விதமாக செயல்பட்ட ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி மாமன்னர் பூலித்தேவரை அவமானப்படுத்தி மாமன்னர் ஒண்டிவீரன் தான் என அவதூறு பரப்பியதைக் கண்டித்து நெற்கட்டும்செவல் பஞ்சாயத்தை சேர்ந்த 12 உறுப்பினர்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்.

மேலும் மாவீரன் ஒண்டிவீரன் விழாவில் வாகனங்கள் வந்து செல்வதற்காக எங்களது நிலங்களை ஜேசிபி மீண்டும் விவசாயம் செய்ய முடியாமல் பாழ்படுத்திவயர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

மாமன்னர் பூலித்தேவனை இழிவுபடுத்தி நூல் வெளியிட்டு ஆதித்தமிழர் பேரவையினர் சாதிக் கலவரத்தை தூண்டிவிடுவதாக நெற்கட்டும் செவல் பொதுமக்கள் கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு வாசுதேவநல்லூர் யூனியன் சேர்மன் கோமதி முத்துராணி துரைச்சி தலைமையில் இன்று மனு அளித்தனர்.

தினமலர் - 25-8-2011





பூலித்தேவன் வரலாற்றை இழிவுபடுத்தும் முயற்சியை கண்டித்து நெல்கட்டும்செவல் பகுதி மக்கள் நெல்லையில் முற்றுகையிட்டனர்.

# பூலித்தேவன் வரலாற்றை இழிவுபடுத்தும் முயற்சி நெல்லையில் நெல்கட்டும் செவல் மக்கள் முற்றுகை

திருநெல்வேலி, ஆக. 25—
பூலித்தேவன் வரலாற்றை இழிவுபடுத்தும் முயற்சி நடப்பதாக நெல்லையில் நெல்கட்டும் செவல் மக்கள் முற்றுகையிட்டனர்.

நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் வாசுதேவநல்லூர் பஞ்.,யூனியன் தலைவி கோமதி முத்துராணி துரைச்சி தலைமையில் நெல்கட்டும் செவல் பகுதி மக்கள் பலர் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது:

சுதந்திர போராட்டத்திற்கு முதல் முழக்கமிட்ட மாமன்னன் பூலித்தேவன் ஆண்ட பாளையம் நெல்கட்டும் செவல் பாளையம் ஆகும். இந்த வரலாற்றை சிலர் இழிவுபடுத்தி வருகின்றனர். இதனால் இரு தரப்பினருக்கு இடையே பிரச்னைகள் ஏற்பட்டுள்ளது.

நெல்கட்டும் செவல் பச்சேரியில் உள்ள கல்வெட்டை அகற்ற வேண்டும். பூலித் தேவன் மாளிகையை மாமன்னர் பூலித்தேவன் மாளிகை என பெயர் மாற்ற வேண்டும். தொடக்கப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாவீரன் பூலித்தேவன் என்ற பெயரை எடுத்து விட்டு மாமன்னன் பூலித்தேவன் என பெயர் மாற்றி அமைக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.